செப்டம்பர் 29, 2019

முதியோர் ஞாயிரு

முதியோரை ஏற்றுக்கொள்ளுதலும் பராமரித்தலும்

ஆதி.46:28-34, 47: 1 – 10, சங்கீதம். 21 1 திமோ. 5: 1 – 10 லூக்கா. 2: 25 - 35

1. "ஆலோசனை இல்லாத இடத்தில் ஜனங்கள் சீர் கெட்டுப்போவார்கள்"

ஜனங்கள் அதாவது சமுதாய மக்கள் வாழ ஆலோசனை மிக முக்கியம். அப்பேற்பட்ட ஆலோசனையை நாம் எங்கு பெற் முடியும்?

நம் பெற்றோர்களிடமே. "மகனே உன தகப்பன் புதியை கேள், தாயின் போதகத்தை தள்ளாதே". தற்போது கணக்கெடுப்பின் படி கிட்டதட்ட 104 மில்லியன் முதியவர்கள் காணபடுகின்றனர். 2050 ஆண்டு முதியவர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 305 மில்லியனாக காணப்படும். முதியவரகளின் எண்ணிக்கை அதிகரிப்பதுப் போலவே அவர்கள் எதிர்க்கொள்ளும் பிரச்சனைகளும் கொடுமைகளும் அதிகரித்துக்கொண்டே வருகிரது.

முந்தைய காலக்கட்டத்தில் முதியவர்களே மதிப்புமிக்கவர்களாகவும் கலாச்சாரத்தூண்களாகவும் கருதப்பட்டனர். குடும்பத்தின் நல்ல நிகழ்வுகளிலும் முன்னேற்றங்களிலும் அவர்களின் பங்கு இன்றியமையாதது. ஆனால் தற்போது நிகழ்த்திய ஆய்வின்ப்படி நம் குடும்பத்தில் காணப்படும் முதியவர்களில் பெரும்பாலானோர் மனரீதியாகவும், உடல்ரீதியாகவும், சமுதாயரீதியாகவும் பொருளாதர பிரச்சனைகளினாலும் பாதிக்கப்பட்டுள்ளதாக ஆய்வரிக்கை தெரிவிக்கின்றது.

ஆண்டவருடைய பிள்ளைகளாகிய நாம் முதியவற்களிடம் அன்புக்கூற கடமைப்பட்டிருக்கிறோம். ஆண்டவர் நம்மையும் சபையையும் முதியவர்களிடம் அன்புக்காட்ட அவர்களுக்கு இழைக்கப்படும் அந்நீதிகளுக்கு முற்றுப்புளி வைக்க அழைக்கிறார்.

2. கரிசனையுள்ள அக்கறை

வேதாகமத்தில் பழைய ஏற்பாட்டில் வாசிக்கும்போது (ஆதியாகமம். 43:27) யோசேப்பு தன் தகப்பானாரைப்பற்றி தன் சகோதரர்களிடம் முதிர்வயதான உங்கள் தகப்பன் சுகமாயிருக்கிறாரா? அவர் இன்னும் உயிரோடு இருக்கிறாரா? என்று மிகுந்த கரிசனையுள்ள அக்கரையுடன் விசாரிக்கிரான். அவ்வாறு விசாரித்ததோடு இல்லாமல் தகப்பனை அழைத்துக்கொண்டுவர வண்டிக்ளையும் பத்து ஆண் கழுதைகளின்மேல் எகிப்த்தின் மிக சிறந்த பதார்த்தங்களும், பத்து பெண் கழுதைகளின் மேல் தன் தகப்பன்னூக்கு வழிப்பிரயாணத்திற்க்கான உணவும் கொடுத்து அனுப்புகிறான்.

பின்பு யோசேப்பு பார்வோனின் கட்டளைப்படியே எகிப்த்து தேசத்திலே செழுமையான நல்ல இடத்திலே தன் முதிர்வயதான தகப்பனோடு குடியேறினான்.

ஆனால் இன்றைய காலக்கட்டம் எவ்வாறு இருக்கிறது. இன்றைய தலைமுறையினர் தன் பெற்றோர்களின் நல்லனை, பெலவீனத்தை கருத்தில்க்கொள்வதில்லை. அவர்களோடு தங்கள் நேரத்தை செலவழிப்பது இல்லை. வயதான் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் கனிவான பேச்சுகளுக்கும், மென்மையான தொடுதல்களுக்கும், தொலைப்பேசி அழைப்புகளுக்கும் ஏங்குகின்றனர்.

ஆனால் இலம் தலைமுறையினர் இவற்றை உணருவதில்லை. Whatsapp செயல்மூலம் உலகின் மூலையிலுள்ள அனைவருக்கும் *Good Morning, Have a good day, How are you, Had breakfast* என்று குறுஞ் செய்திகள் அனுப்புபவர் சொந்த வயதான பெற்றோர்களிடம் இக்கேள்விகளை கேட்பதுமில்லை அவர்கள்மேல் கரிசனைக் கொள்வதுமில்லை. மேலும் திருமனமானவுடன், நன்கு சம்பாதிக்க ஆரம்பித்தவுடன்

பெற்றோர்களை முதியவர் இல்லங்களிலும், காப்பகங்களிலும் சேர்த்துவிடும் அவல நிலை இன்று காணப்படுதிறது.

இனிமேல்லாவது ஐந்தாவது கற்ப்பணையான "உன் தகப்பனையும் தாயையும் கணம்பண்ணுவாயாக" என்ற கட்டளைக்கு கீழ்ப்படிந்து இர்ணடாவது குழந்தை பருவமான வையோதிய காலத்தில் பெற்றோர்களின் தேவைகளை புரிந்துக்கொண்டு கரிசனையுள்ள அக்கறையோடு அவர்களிடம் நம் நேரத்தை செலவழிப்போமாக.

பாவுல் தீமோத்தேயுவுக்கு எழுதின நிருபங்களில் "முதிற்வயதுள்ளவனை கடிந்துக்கொள்ளாமல் அவர்களை தகப்பனைபோலவும், முதிற்வயதுள்ள ஸ்த்ரிகளை தாய்போலவும் நடத்த வேண்டுமென்று புத்தி சொல்லுகிறார்.
ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் கொர்பான் காணிக்கை முறையை வண்மையாக் கண்டிக்கிறார் (மாற்க்கு. 7:11,12)

இன்றைய சமுதாயத்தில் மகள் மாமியாரை பார்க்கும் கண்ணோட்டமும், தன் தாயாரை பார்க்கும் கண்ணோட்டமும் முற்றிலும் மாறுப்பட்டதாக காணப்படுகிறது. தனது சொந்த பேர பிள்ளைகளை பார்ப்பதற்க்குக்கூட முடியாமல் ஏங்கி தவிக்கும் வயோதிய மாமனார், மாமியார்கள் எறாலம். இந்த சூழ்நிலை மாறவேண்டும்.
முதியவர்களை மரியாதையுடனும் பண்பாடுடனும் நடத்த வேண்டும். அவர்களின் இணல்களுக்கு மதிபளிக்க வேண்டும்.

"வினைவிதைத்தவன் வினை அறுப்பான் என்ற பழமொழியை மனதில்க்கொண்டு இன்றைய தலைமுறையினர் முதியவர்களிடம் பண்போடும் பரிவோடும் நடந்துக்கொள்ள வேண்டும்

3. <u>இதயப்பூர்வமான மரியாதை:</u>

நாம் புதிய ஏற்ப்பட்டில் சிமியோன் மற்றும் அன்னாளுக்கு அளிக்கப்பட்ட மிக உயர்நத கணத்தை குறித்து வாசிக்கின்றோம்.

சிமியோன் என்ற பெயருக்கு அர்த்தம் கீழ்ப்படிபவனும், கவனிப்பவனும். அவன் நீதியும் தேவபக்தியும் உள்ளவனாயும், இஸ்ரவேலின் ஆறுதல் வரக்காத்திருக்கிறவனாயும் இருந்தான்; அவன் மேல் பரிசுத்த ஆவி இருந்தார். அவன் தேவனை நோக்கி புறஜாதிகளுக்குப் பிரகாசிக்கிற ஒளியாகவும், உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு மகிமையாகவும், தேவரீர் சகல ஜனங்களுக்கும் முன்பாக ஆயத்தம்பண்ணின உம்முடைய இரட்சணியத்தை என் கண்கள் கண்டது என்றான்.

அதேப்போல் எண்பத்துநாலு வயதாயிருந்த விதவை அன்னாளின் பெயர் கருணை மற்றும் தயவு நிறைந்தவள் என்பதாகும். அவள் தேவாலயத்தை விட்டு நீங்காமல், இரவும் பகலும் உபவாசித்து, ஜெபம்பண்ணி, ஆராதனை செய்துகொண்டிருந்தாள். மேலும் அவள் கர்த்தரைப் புகழ்ந்து, எருசலேமிலே மீட்புண்டாக காத்திருந்த யாவருக்கும் அவரைக்குறித்துப் பேசினாள்.

இந்த இரண்டு நபரும் யோசேப்பு மற்றும் மரியாளுக்கு உறவினர்களும் இல்லை, குடும்ப்தொடர்புடையவர்களும் இல்லை. இருப்பினும் தேவன் அவர்களின் பக்தியை பாகுபாடின்றி கணம்பண்ணினார். அவர்கள் மேசியாவின் வருகைக்காகக் காத்திருந்தார்கள்

அப்படியே குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு பெரியவரும் ஒரு குழந்தை மகிழ்ச்சியின் மையமாகவும் நம்பிக்கையின் நட்சத்திரமாகவும் ஆவலுடன் காத்திருக்கிறார்கள். இதற்க்காக பல் நாட்கள் உபவாசித்தும் ஜெபித்து காத்திருக்கிர முதியவர்கள் அநேகர். அவர்களின் உள்ளீடுகள் மற்றும் அவர்களின் வாழ்க்கையில் முதலீடுகள் இளைய தலைமுறையை வடிவமைத்துள்ளன.

இப்போது, இளைய தலைமுறையினர் அவர்களின் நீண்ட ஆயுள் தியாகத்தைப் பாராட்டுவதை விட அவர்களின் மகிழ்ச்சி மற்றும் நம்பிக்கையின் அடையாளத்துடன் அவர்களை கணம்பண்ணுவதும், மரியாதை செலுத்துவதும், அன்போடு நடத்துவதுமே மிக சிறந்த கடமையாகும்